30

கையெழுத்து

அறை வாசலில் நிழலாடிய மாதிரி இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். யாரும் இல்லை. என்னுடன் அதே அறையில் வேலை பார்த்து வந்த தாஸும் ராமன் நாயரும் புள்ளி சேர்த்துக் கட்டம் கட்டும் விளையாட்டில் மூழ்கியிருந்தார்கள். நான் தலையைக் கவிழ்த்து எங்கள் கம்பெனி வண்டிகள் ஒவ்வொன்றையும் மாதம் ஐநூறு ரூபாய்க்குக் குறைவில்லாமல் பழுது பார்த்ததாக பில் அனுப்பும் அழகு ஆட்டோமொபைல்ஸ் கணக்கு வழக்கைப் பரிசோதிப்பதில் முனைந்தேன். ஒவ்வொரு பில்லிலும் ஐம்பது உட்பிரிவுகள் இருந்தாலும் கூட்டல் கழித்தலில் ஒரு தவறு இல்லாமல், அந்த ஒரு காரணத்திற்காகவாவது பில்லை நம்பகமானது என்று எண்ண வைத்துவிடும் அவர்கள் ஆற்றலை நினைத்து வியந்தேன். மறுபடியும் வாசலில் ஒரு கணம் வெளிச்சம் சிறிது குறைவடைந்து சரியாயிற்று. நிமிர்ந்து பார்த்தேன். யாரும் இல்லை. "ராமன் நாயர், யார் அங்கே?" என்றேன். அந்த வாயிற்படி வழியாக என்னைவிட ராமன் நாயருக்கே வெளியுலகம் நன்றாகக் காணக்கிடைக்கும்.

"அந்தப் பொம்பளை நிக்குது" என்று ராமன் நாயர் சொன்னான்.

"எந்தப் பொம்பளை?"

"அதான் மல்லையாவோட பொண்ணு."

எங்கள் கம்பெனியின் நீளச் சம்பளப் பட்டியலில் மல்லையா என்று ஒரு பெயர்தான் 'ஸ்வீப்பர்' என்று போடப்பட்டிருக்கும். ஆனால் அவன் துடைப்பத்தையோ ஒட்டடைக் குச்சியையோ கையில் எடுத்து நான் பார்த்ததில்லை. அவனுடைய மனைவி, மக்கள், மைத்துனன், என யார் யாரோ அறைகளைப் பெருக்கிச் சுத்தம் செய்ய வருவார்கள். மல்லையா தோட்டத்தில் ஒரு மூலையில் நாளெல்லாம் உட்கார்ந்திருப்பான். மல்லையாவின் பல பெண்களை அவர்கள் குழந்தையாக இருந்த நாளிலிருந்து பார்த்திருக்கிறேன். பிற ஜாதிகளில் பெண்களுக்குக் கல்யாணம்

செய்து வைப்பது கடினமாகிப் போயிருக்கலாம். ஆனால் மல்லையாவின் பெண்கள் யாரும் பதினான்காம் வயதைக் கன்னியாகத் தாண்டியதில்லை. ஒரு வருடம், அதிகம் போனால் இரு வருடங்கள் அந்தப் பெண்கள் அங்கு கண்ணில்பட மாட்டார்கள். ஆனால் அதன் பிறகு கணவன், குழந்தையுடன் எங்கள் கம்பெனி தோட்டத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்து பகல் உணவு சாப்பிடுவார்கள். ஒரு வார்த்தை பேசாமல் ஒரு மூலையில் நாளெல்லாம் உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டு கிடக்கும் மல்லையாவைப் பார்க்கும் போது அவன் சுற்றமும், கிளையும் இவ்வளவு வளர்ச்சி கொண்டது என்று யாருக்கும் எண்ணத் தோன்றாது.

"என்னவாம்?" என்று ராமன் நாயரைக் கேட்டேன்.

ராமன் நாயருக்கு என்னைவிட மல்லையாவின் குடும்பத்தை நன்றாகத் தெரியும். அவன்தான் அந்தப் பெண்களையும் அவர்கள் கணவன்மார்களையும் அதட்டி விரட்டி வேலை வாங்குவான்.

"உங்களைத்தான் பார்க்கணுமாம், சார்!" என்று ராமன் நாயர் சொன்னான்.

"என்னை என்னப்பா பார்க்கக் கிடக்கறது?" என்றேன். அக்கேள்வியில் தொனித்த தளர்ச்சியை நன்கு உணர்ந்தவளாக அந்தப் பெண் வாயிற்படியில் என் கண் பார்வையில் படும்படி நின்றாள்.

"என்னம்மா?" என்றேன்.

அவள் என் மேஜையருகே வந்து நின்றாள். எந்த எச்சரிக்கையும் இல்லாமல் அழ ஆரம்பித்தாள்.

"ஐயய்யோ! என்னது? இதெல்லாம் ஆபிஸு. இங்கே அழாதே! என்னாச்சு?"

அவள் அழுகையை உடனே நிறுத்தினாள்.

"என்ன வேணும்?"

"ஒரு கடுதாசி தரணும்."

"எதுக்கு?"

"அம்பது ரூபா லோனு வேணும்."

எங்கள் கம்பெனியில் முந்நூறு பேர் வேலை பார்த்தார்கள். அதில் குறைந்தது நூறு பேருக்காவது நான் 'லோன்' விண்ணப்பமும் சம்பள 'அட்வான்ஸ்' விண்ணப்பமும் மாறி மாறி எழுதித் தர வேண்டிய நிர்ப்பந்தம் வருடமெல்லாம் நேரும். 'லோன்' விஷயத்தில் ரொம்ப ராசியானவன் என்று எனக்குப் பெயர் வந்துவிட்டது.

இந்த விண்ணப்பங்களை எல்லாம் சேர்த்து வைத்து ஒரு நாள் முதலாளி பார்த்தால் எனக்கு என்ன நேரும் என்று நான் சில சமயங்களில் கற்பனை செய்து பார்த்துச் சங்கடப் படுவதுண்டு. இதுவரை அவர் இன்னும் அதைச் செய்யவில்லை.

"எனக்கு இப்போ வேறே வேலையிருக்கு. நீ அவன்கிட்டே எழுதி வாங்கிக்க" என்று தாஸைக் காண்பித்தேன். தாஸ் விஷமமாக என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான்.

"அவுங்க நீங்கதான் எழுதணும்கறாங்க."

"போ, போ! என்னாலே முடியாது!"

அவள் மறுபடியும் அழ ஆரம்பித்தாள். தாஸும், ராமன் நாயரும் அவர்கள் ஆட்டத்தைச் சுருட்டி வைத்துவிட்டு அறையை விட்டு வெளியேறினார்கள்.

நான் அவளைக் கவனியாதது மாதிரி அழகு ஆட்டோ மொபைல்ஸ் காகிதங்களில் கூட்டல் கழித்தலைச் சரிப்பார்ப்பது போல இருந்தேன். ஆனால் எனக்கு ஒரு வேலையும் ஓடவில்லை என்பதை நாங்கள் இருவரும் உணர்ந்தபடி இருந்தோம்.

"சரி, சொல்லு. என்ன எழுதணும்?"

"ஊருக்குப் போகணும் சாரு."

"எந்த ஊருக்கு?"

"என் புருஷன் ஊருக்கு!"

"ஏன், அவர் அழைச்சிண்டு போகமாட்டாரா?"

"அவரு என்னை விட்டுட்டுப் போயிட்டாரே?"

"அப்போ மல்லையா கிட்டே சொல்லு."

"அவர்தான் ஒங்க கிட்ட சொல்லச் சொன்னாரு."

"நான் என்ன பண்ண முடியும்? உன் புருஷன் யாருன்னு தெரியாதே?"

"தெரியும் சாரு. நீங்கதான் அவருக்கு வேலைக்கெல்லாம் கடுதாசி எழுதிக் கொடுத்தீங்க."

"நானா?"

"ஆமாம், சாரு. நீங்க எழுதிக் கொடுத்துதான் அவருக்கு வியாசர்பாடியிலே வேலைக்கு சேர்ந்தாரு."

"இப்போ எங்கே இருக்காரு?"

"அங்கேதான்!"

"வியாசர்பாடி போறதுக்கு அம்பது ரூபா எதுக்கு? நான் வேணும்னா இரண்டு ரூபா தரேன். போய்ப் பாரு."

அவள் ஒரு கணம் மௌனமாக நின்றாள். "அப்படி இல்லீங்க சாரு, எப்படியும் நாப்பது ஐம்பது ரூபா வேணும்."

"நாப்பது அம்பது ரூபாயெல்லாம் யாரும்மா தருவாங்க?"

"அதாங்க லோனு எழுதச் சொன்னாங்க."

"யாரு?"

"நாயினாதான்."

"உன் அப்பாவையே வரச்சொல்லு."

அவள் மீண்டும் அழத் தொடங்கினாள். எனக்கு அவள் அழுகையோடு அவள் பெரிதாகச் சுற்றி முடித்திருந்த தலை மயிர் எழுப்பிய எண்ணெய் வாசனையையும் பொறுக்க முடிய வில்லை. சின்னக் குழந்தையாக மொட்டைத் தலையோடு சுற்றிய நாளிலேயே அவளைப் பார்த்திருக்கிறேன். இப்போதுகூட அவளுக்கு இருபது வயது நிரம்பியிருக்காது. அதற்குள் இரண்டு, மூன்று குழந்தைகள். போதாததற்கு ஓடிப்போன கணவன்.

"இதோ பார். செஞ்சம்மா. நான் அப்ளிகேஷன் எழுதினாக் கூட உனக்கு எப்படிப் பணம் தருவாங்க? நீயா இங்கே வேலை செய்யறே?"

"நான்தான் ஒரு வருஷமா வேலை செய்யறேன், சாரு."

"அது சரி, ஆனா வேலை உன் அப்பா பேருக்குத்தான் இருக்கு. பணம் கொடுத்தாகூட உங்க அப்பாவுக்குத்தான் தருவாங்க."

"நான்தான் சாரு வேலை பண்ணறேன்!"

"நீ வேலை பண்ணினா? உன்னை இங்கே வேலைக்கு வைக்கலியே— உங்க அப்பாவைத்தானே வைச்சிருக்கு. நீ போய் அவரை வரச் சொல்லு. நான் எழுதித் தரேன்."

"அவரு வரமாட்டாருங்க."

"ஏன்?"

"அவருதான் என் புருஷனை போடான்னுட்டாரு."

"அப்ப நான் என்ன செய்யறதும்மா? உனக்குப் பணம் தர மாட்டாங்களே!"

"நான் அக்கவுண்ட் ஐயா கிட்டே சொல்லிக்கிறேன். சாரு."

"நீ என்ன சொல்ல? அவரு மட்டும் எப்பிடித் தர முடியும்? உன் அப்பாவைக் கொண்டு வா. அவரு கையெழுத்துப் போட்டாத்தான் பணம் கொடுக்கறதுன்னா தருவாங்க."

"அவரு வரமாட்டாருங்க" அவள் மீண்டும் அழ ஆரம் பித்தாள்.

"ஏய் ராமன்! தாஸ்! எங்கே போயிட்டீங்க? இவகிட்டே விஷயத்தைச் சொல்லுங்கப்பா!"

அவர்கள் யாரும் வரவில்லை. நான் ஒரு வெற்றுத்தாளை எடுத்து மல்லையா எழுதுவது போல ஒரு விண்ணப்பம் எழுதினேன். தவிர்க்க முடியாத அவசரக் குடும்பச் செலவு ஏற்பட்டு விட்டதாகவும், உடனே ஐம்பது ரூபாய் கொடுத்துதவி மாதம் ஐந்து ரூபாய் வீதம் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாக முடித்தேன். "வா, உங்க அப்பாகிட்டே நானே வந்து சொல்றேன்" என்று சொல்லி எழுந்து நின்றேன்.

அவள் ஒரு கணம் தயங்கினாள். பிறகு அறையை விட்டு வெளியேறினாள். கூடையும் துடப்பமும் வெளி வராந்தாவில் இருந்தன. அதை அவள் தூக்கிக்கொள்ள நான் எங்கள் கம்பெனித் தோட்டத்தின் பக்கம் சென்றேன். ஏனோ அவள் என்னுடன் வரவில்லை.

மல்லையா மரத்தில் சாய்ந்து உட்கார்ந்த வண்ணம் பொறாமைப் படத்தக்க விச்ராந்தியுடன் பீடி குடித்துக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்துக் காலை மடக்கிக் கொண்டான்.

"ஓம் பொண்ணை ரூமுக்கு அனுப்பிச்சு அழுது புலம்ப வைக்கிறே! துரையாலே நேரா வரமுடியாதோ?"

"அதெல்லாம் இல்லீங்க."

"ஆமாம், என்னாச்சு?"

"எதுங்க?"

"என்ன எதுங்கறே? உனக்கு ஒண்ணுமே தெரியாதோ?"

"ஒண்ணுமில்லீங்க. கமுதைதான் கடுதாசி எழுதிண்டு வரேன்னுது."

"அதுக்கு அவளைத்தான் அனுப்பணுமா? நீ வரக்கூடாது?"

மல்லையா பேசாதிருந்தான்.

"சரி, இதுலே கைநாட்டு வை."

அவன் அந்தத் தாளை வாங்கிக் கொண்டான். "சரி, நீங்க போங்க" என்றான்.

"மை வேண்டாம், இந்தா பேனா."

அவன் எனக்காகச் செய்வது போலப் பேனாவை வாங்கிக் கொண்டான். மூடி திறந்து வெகு நிதானமாக நிப்பின் மறு புறத்தில் தனது இடதுகைக் கட்டை விரலைத் தேய்த்துக் கறுப்பாக்கிக் கொண்டான். நான் பேனாவைத் திரும்ப வாங்கிக் கொண்டேன்.

"சரி, நீங்க போங்க" என்றான்.

"நீ கைநாட்டு வைச்சுட்டா கீழே உன் கட்டை விரல் தான்னு ஒரு வரி எழுதிடுவேன்."

"அதெல்லாம் நான் பார்த்துக்கறேன், சாரு."

நான் திரும்ப இருந்தவன், "மை காஞ்சிடப்போறது" என்றேன்.

அடுத்த கணம் மல்லையா தடாலென்று எழுந்தான். பல்லைக் கடித்து நெறித்த வண்ணம் நான் எழுதிக் கொடுத்த விண்ணப்பத்தைச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தான்.

"என்னப்பா இது?" என்றேன் திகைப்புடன்.

"போய்யா! உன் வேலையைப் பார்த்துட்டுப் போய்யா! மேஜை பின்னாலே ஃபான் அடியிலே குந்திக்கிட்டு இருந்தா, எவன் வீட்டு வெவகாரத்திலயும் புகுந்துடலாம்னு பாக்கறியா?"

மல்லையாவின் முழு ஆகிருதியையும் அன்றுதான் முதல் தடவையாக நான் எதிர்கொண்டேன். ஐந்தடிகூட இல்லாத அந்த உருவம் நெருப்பாகத் தகித்துக் கொண்டிருந்தது.

எனக்கு ஒருகணம் கோபம் சீறிக்கொண்டு வந்தது. எனக்காகவா இந்தப் பொறுப்பில்லாத சோனித் தகப்பனைத் தேடிக் கொண்டு வந்தேன்? அதைவிட எனக்குக் கோபம் வந்ததற்குக் காரணம் இந்தக் கடன் விண்ணப்பத்தை இன்னொரு முறை எழுதவேண்டி வருமே என்கிறதும்தான்.

"இந்தக் குப்பையையாவது நீ பெருக்கிப் போடு" என்றேன்.

"போய்யா உன் வேலையைப் பார்த்துட்டு, என் வீட்டுப் பொண்ணு தகராறு பண்ணினாப் பெரிசா ராசி பண்ண வரான். எல்லாம் எனக்குத் தெரியும், போ."

நான் என் அறைக்குத் திரும்ப வந்தேன். இப்போது அழகு ஆட்டோமொபைல்ஸ் கணக்கு ஒவ்வொன்றும் தகராறு அடித்தது. பத்துப் பதினைந்து பில்களை நான் சரி பார்த்து அனுப்பி அன்றே பணம் பட்டுவாடா ஆக வேண்டும். இல்லாது போனால் மாலைச் சீட்டாட்டத்தின் போது அழகுக்காரர் என் முதலாளியிடம் 'என்ன, இப்பல்லாம் உன் கம்பெனியிலேருந்து செக் வர்றதுக்கு ரொம்ப லேட்டாறது?' என்று பேச்சோடு பேச்சாக சொல்லி வைப்பான். எவ்வளவு கடன் விண்ணப்பங்கள் நடுவில் இந்தக் கணக்கு வழக்—குகளை நான் சரி பார்த்து முடிக்க வேண்டியிருக்கிறது என்று அவர்கள் யாருக்கும் தெரிய நியாயமில்லை.

செஞ்சம்மா மீண்டும் என் அறை வாயிற்படி முன்னால் நின்றாள். அவளைக் கண்டதுமே தாஸும், ராமன் நாயரும் வெளியே போய்விட எழுந்தார்கள்.

"இருங்கப்பா. என்னை ஏன் தனியா விட்டுட்டுப் போய் விடறீங்க?" என்று கோபமாகச் சொன்னேன். செஞ்சம்மாவைப் பார்த்து, "நீ என்னை என்னன்னு நினைச்சிட்டிருக்கே? உன் அப்பன் என்னைக் கண்டபடி பேசறான். போ, போ, உன் விஷயத்திலெல்லாம் நான் தலையிட முடியாது" என்றேன்.

"இப்ப நாயினா கையெழுத்துப் போடறேங்கறாரு" என்றாள்.

"பெரிய துரை! அவர் போடறாருன்னா நான் ஓடிப் போய் சலாம் போடணும். திட்டினா வாயை மூடிண்டு திரும்பி வரணும்."

"இல்லீங்க. இப்ப போடறேங்கறாரு."

"அவரு போட்டா போடட்டும். போடாம போகட்டும். இனிமே என்கிட்டே வராதே."

"நீங்கதான் எழுதித் தரணும்."

"இவ்வளவு பெரிய கம்பெனியிலே நான் ஒருத்தன்தானா எழுதித் தர்றதுக்கு? போ, போ வேறே யார்கிட்டேயாவது எழுதிக்கோ."

அவள் அழ ஆரம்பித்தாள்.

"இங்கே அழுதுகிழுது வம்பு பண்ணினா உன்னை இந்த காம்பவுண்டுக்குள்ளேயே வர முடியாதபடி பண்ணிடுவேன்."

இதெல்லாம் சாத்தியமில்லை என்று எனக்குத் தெரியும். அவளுக்கும் தெரியும். தாஸ், ராமன் நாயர் எல்லோருக்கும் தெரியும்.

"நானே எங்கேயாவது போயிடறேன்" என்று சொல்லி மேஜை மீதிருந்த அத்தனை காகிதங்கள் மீதும் ஒரு பெரிய கண்ணாடிக் குண்டை வைத்துவிட்டு எங்கள் கம்பெனி காண்டின் பக்கம் விரைந்தேன். செஞ்சம்மாவும் என் பின்னே ஓடி வந்தாள். தோட்டத்தின் இன்னொரு மூலையில்தான் காண்டீன் இருந்தது. நான் சற்று வேகமாக நடந்தேன். அவளும் வேகமாகப் பின் தொடர்ந்தாள். என் நடை கிட்டத்தட்ட ஓடுவது போல மாறிற்று. அவளும் பின்னால் ஓடி வந்தாள். அவளிடமிருந்து ஏதாவது நகை நட்டை நான் பிடுங்கிக்கொண்டு ஓடுகிறேன் என்றுகூட யாரும் நினைக்கக்கூடும். தோட்டத்தின் நடுவில் சடாலென்று நின்று திரும்பினேன். அவளும் என் முன்னால் அப்படியே நின்றாள்.

"என்னை என்னதான் பண்ணித் தொலைக்கச் சொல் லறே?" என்று கேட்டேன்.

"இந்த வாட்டி நாயினா கையெழுத்துப் போட்டிருவாங்க."

"வா, என் கையோட. உன் அப்பனையே கேக்கறேன்."

மல்லையாவைக் கழுத்தை நெறித்துப் போட்டுவிடலா மென்று தோன்றியது. அவன் ஞானிக்குரிய அமைதியுடன் மரத்தில் சாய்ந்து கொண்டு புகைத்துக் கொண்டிருந்தான்.

"ஏம்ப்பா, அங்கே ஏதோ பங்களாலே இருக்காரே, அவர் எனக்கு முதலாளியா? நீ முதலாளியா?" என்று கேட்டேன்.

அவன் எனக்குப் பதில் தரவில்லை. அவன் மகளைப் பார்த்துக் கண்களை விரித்து, "போடி அப்பாலே!" என்றான். அவள் உடனே மறைந்தாள்.

"மல்லையா, நான் உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன். என் வேலை போயிடும். தயவு செய்து இனிமே நீயும் உன் குடும்பமும் என்னைச் சும்மா விட்டுடுங்க."

மல்லையா என்னைப் பரிவோடு பார்த்தான்.

"உன் குடும்ப விஷயமெல்லாம் எனக்கெதுக்கு? உன் பொண்ணு திரும்பத் திரும்ப அங்கே வந்து அழுதுட்டு நிக்குது. தயவுசெய்து என்னை விட்டுடு."

"நான் வரச் சொல்லலீங்க. லோன் போடணும்னு நான் சொன்னதுக்குதான் அதுவா உங்ககிட்டே வந்து நிக்குது."

"லோன் போடணும்னா போட்டுத் தொலையேன்."

"எதுக்குப் போடறது?"

"நீதானே சொன்னே?"

"பொண்ணைக் கட்டிக் குடுத்தா அது புருஷன் வீட்டுல தானே இருக்கணும். ஒவ்வொரு பொண்ணா, புருஷன், குழந்தை, மாமியார், மாமனாருன்னு இங்கேயே வந்து குவிஞ்சா?"

"நீதானே எல்லோரையும் கூட்டிச் சேக்கற மாதிரி இருக்கு?"

"இந்தக் கழுதைங்களை யாரைய்யா சேத்தா? அதுகளான்னா வந்து வந்து தொலையுது! போ, போன்னு விரட்டின்னாலும் திரும்ப இங்கேயே வந்து நிக்குதுங்க."

"நீ ஒரு வேலையும் செய்யாம அதுகளை வேலை வாங்கறே."

"அப்படியாவது போகுமான்னு பாக்கறேன், நகர மாட் டேங்குதே! இங்கே வந்து கூடையையும், துடைப்பத்தையும் தூக்கிக்குது. இந்தக் கழுதை புருஷனுக்கு என்ன சம்பளம் தெரியுமா?"

"எனக்கெப்படித் தெரியும்?"

"எல்லாம் சேர்த்து நானூறுக் கணக்குக்கு வாங்கறான். எல்லாத்தையும் வட்டிக்குக் கடன் கொடுத்துட்டுப் பொஞ்சாதி

பிள்ளைங்களை இங்கேயே தள்ளிடறான். அதான் அவனைப் போடான்னு விரட்டினா இவளும் கூடத்தானே ஓடணும்? இன்னும் அம்பதைக் கொண்டா, நூறைக் கொண்டான்னு உயிரை வாங்குது. இந்த வாட்டி சொல்லிட்டேன். இனிமே அப்பன் செத்த முகத்தை மட்டும் பாக்க வான்னு.”

நான் என் அறைக்குத் திரும்பி வந்து வெகு கவனமாக இன்னொரு கடன் விண்ணப்பம் எழுதினேன். அதை மல்லையா விடம் கொடுத்தபோது சாதகமாக முடிய வேண்டுமென்று பிரார்த்தனை கூடச் செய்தேன். என் பிரார்த்தனைக்கும் அதன் விளைவுக்கும் எந்தப் பொருத்தமுமில்லை. அன்று இரவு தூக்கத்தில் மல்லையா இறந்து போய்விட்டான். அவனுடைய குடும்பத்திலேயே யாருக்காவது அவனுடைய வேலையைக் கொடுத்து விடலாமென்று முடிவு செய்யப்பட்டது.

இப்போதெல்லாம் கடன் விண்ணப்பங்களில் செஞ்சம்மாவே கையெழுத்திடுகிறாள்.

1985